# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வரை), தருமபுரி

ந.க.எண். 096/2018 (கணக்குகள்) நாள் : 05.08.2019

## சுற்றறிக்கை

பொருள் : வங்கியின் 52 (2017-2018) - மற்றும் 53- வது (2018-2019) நிர்வாக ஆண்டுகளுக்கான பொதுப் பேரவை கூட்டம் - தொடர்பாக.

---------

வங்கியின் 52 (2017-2018) மற்றும் 53-வது(2018-2019) நிர்வாக ஆண்டுகளுக்கான பொதுப் பேரவை கூட்டம் 07.08.2019, புதன் கிழமை காலை 11.00 மணிக்கு, DNC விஜய் மஹால், சேலம் மெயின் ரோடு, தருமபுரியில், நடைபெற உள்ளது. பொதுப் பேரவையின் ஒப்புதல் கோரும், பொருள் நிரலுடன் தொடர்புடைய தலைமையக பிரிவு மேலாளர்கள் மற்றும் உதவியாளர்கள் இது தொடர்பான கோப்புகளுடன் பேரவை உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் பேரவை கூட்டம் நடைபெற இருக்கும் மேற்படி கூட்ட அரங்கில் 07.08.2019 காலை 10.00 மணிக்கு தயார் நிலையில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

பேரவை கூட்டப் பணிகளை செய்து முடிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தலைமையக பணியாளர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சரியான முறையில் செய்து முடிக்க அறிவுறுத்தப்படுகிறது. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வரும் உறுப்பினர் சங்கங்களின் பிரதி நிதிகளிடமிருந்து கள மேலாளர்கள் வாயிலாக பெறப்படும் பிரதி நிதிச்சீட்டு மற்றும் வருகை பதிவேடு ஆகியவற்றை பெற்று தொகுக்கும் பணிகளை நிறுவனப் பிரிவு மேலாளர் கண்காணிக்க அறிவுறுத்தப்படுகிறது.

தலைமையக பணியாளர்கள் எவரும் பேரவை கூட்டம் நடைபெறும் 07.08.2019அன்று விடுப்பில் செல்லக் கூடாது என தெரிவிக்கப்படுகிறது. மேலும், தலைமையக பணியாளர்கள் அனைவருக்கும் பேரவை கூட்டம் நடைபெறும் 07.08.2019 அன்று பேரவை கூட்டம் நடைபெறும் மேற்படி திருமண மண்டபத்தில் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது..

ஒம்./-கி.ரேணுகா
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்.

பெறுதல் :-
அனைத்து தலைமையக பணியாளர்கள்.
(உதவி பொது மேலாளர்கள், மேலாளர்கள், உதவி மேலாளர்கள், பிரிவு உதவியாளர்கள், ஓட்டுனர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் அனைத்து ஒப்பந்த பணியாளர்கள் உட்பட)

/உண்மை நகல்/

05/08/19

மேலாளர் (கணக்குகள்)